**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் - 2021**

----------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுகள்

--------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

----------------------------------------

ஸ்ரீ ஸ்ரீயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரை மற்றும் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 107 (05) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுகளினூடாக 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

----------------------------------------------------------------

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

----------------------------------------------------------------------------------------------------

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகார சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து பல்கலைக்கழகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையாற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்தயாரித்தல் தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகள

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும். பொதுப்பேரேடு, நாட்குறிப்பேடுகள், நாட்குறிப்பேடு வவுச்சர்கள், கொடுப்பனவு வவுச்சர்கள் ஆகிய பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பராமரித்தல்

தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வரும் தலைப்புகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.5.2 இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஒழுங்கமையாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| தொடர்புடைய தரத்தின் பிரகாரம் ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொது துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இல் 69 ஆவது பந்தி பிரகாரம் பயன்படுத்துவதற்கு தயார் நிலைக்கு பொருத்தமான திகதி தொடக்கம் தேய்மானம் ஆரம்பித்தல் வேண்டுமாயினும், மீளாய்விற்கான ஆண்டில் அன்பளிப்பாக கிடைக்கப்பெற்றிருந்த மதிப்பீட்டு பெறுமதி ரூபா.40,885,182 ஆன நடைமுறையல்லாத சொத்துக்களுக்கு உரிய காலப்பகுதிக்கான தேய்மானம் கணக்கிடப்பட்டு கணக்கு வைக்கப்படவில்லை. | அன்பளிப்பு செய்த திகதியில் / பயன்படுத்துவதற்கு பொருத்தமான திகதியில் பொருட்கள் கிடைக்கப்பெறும் பத்திரங்களை வழங்குதல் நடைமுறை செயலாக மேற்கொள்ள இயலாது. எவ்வாறாயினும், அந்த பொருட்கள் அன்பளிப்பாக கிடைக்கப்பெற்ற ஆண்டிலயே அதற்கான தேய்மான சதவீதத்தின் கீழ் செவ்வையாக தேய்மானம் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக நிதிக் கூற்றுகளை தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்விற்கான ஆண்டில் பல்கலைக்கழகத்திடம் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா. 949,000,000 ஆன மூலதன அளிப்புகள் தொடர்பில் இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமம் 11 பிரகாரம் நிதிக் கூற்றுகளில் அடையாளம் காணுதல் மற்றும் அளவிடல் மேற்கொள்ளப்படவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக நிதிக் கூற்றுகளை தயாரித்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 நவம்பர் மாதத்தில் வேலைகளை முடிவுறுத்தியிருந்த கட்டிடங்கள் பொருட்டு ஒப்பந்தக்காரர்களிடம் மீளாய்விற்கான ஆண்டில் செலத்தப்பட்டிருந்த ரூபா.2,100,434 ம், கடந்த ஆண்டுகளில் செலுத்தியிருந்த ரூபா.29,694,931 ம் மூலதனமயப்படுத்தாது, அதற்குப் பதிலாக அந்தந்த ஆண்டில் செலவினமாக கருதி கணக்கு வைக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக மீளாய்விற்கான ஆண்டில் மிகை ரூபா.2,100,434 ஆலும், பிடிபணமான உழைப்பு | கருத்திட்டம் புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு கருத்திட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன்படி இக்கருத்திட்டம் புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு நிருமாணிப்புகளின்கீழ் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்த செலவினம் தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரைகளுக்கமைவாக மூலதனமயப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கட்டிடங்களை நிருமாணிக்கும் செலவினம் மூலதனமயப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா.29,694,931 ஆலும் மற்றும் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் கட்டிடங்களின் செலவினம் ரூபா.31,795,365 ஆலும் குறைவாக காண்பிக்கப்பட்டுள்ளது. மேலும் அந்தக் கட்டிடம் பொருட்டு மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்பு-டையதாக ரூபா.1,589,768 ஆன தேய்மானம் மற்றும் கடந்த ஆண்டுகளுக்கு ஏற்புடையதாக ரூபா.3,362,468 ஆன தேய்மானம் கணக்கிடப்படாமை காரணமாக ஆண்டின் மிகை ரூபா.1,589,768 ஆலும் பிடிபண உழைப்புகள் ரூபா.3,362,468 ஆலும் அதிகமாக காண்பிக்கப்பட்டுள்ளது. | | |
| (ஆ) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்விற்கான ஆண்டு வரை யிலான காலப்பகுதியில் 03 கட்டி-டங்களை நிருமாணிக்கும் நடவடிக்-கைகளின் பொருட்டு செலவிடப்ப-ட்டிருந்த ரூபா.29,118,440 ஐ மேற்-கொள்கின்ற வேலைகளாக அடை-யாளம் காண்பதற்குப் பதிலாக, அந்தந்த ஆண்டில் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டதன் காரண-மாக மீளாய்விற்கான ஆண்டில் மிகை ரூபா.8,464,440 ஆலும், பிடி-பண உழைப்புகள் ரூபா.20,654,000 ஆலும், மேற்கொள்கின்ற வேலை-களின் பெறுமதி ரூபா.29,118,440 ஆலும் குறைவாக காண்பிக்கப்பட்-டுள்ளது. | கருத்திட்டம் புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு கருத்திட்டமாக ஆரம்-பிக்கப்பட்டுள்ளதுடன், இந்தக் கருத்திட்டம் புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு நிருமாணிப்புகளின் கீழ் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்த செலவினம் தொழில்நுட்ப குழுவின் பரிந்துரை-களின் மீது மூலதனமயப்படு-த்துவதற்கு எதிர்காலத்தில் நடவடி-க்கை எடுக்கப்படும். | கட்டிடங்களை நிருமாணிக்கும் செலவினம் மூலத-னமயப்படுத்துவ-தற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) நலனோம்பல் கட்டிடத்தை மேம்-படுத்துவதற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா.2,479,747 ஐ மேற்கொள்கின்ற வேலை கணக்கில் பற்று வைப்ப-தற்குப் பதிலாக, கட்டிடங்களை மறுசீரமைத்தல் மற்றும் மேம்ப-டுத்தும் செலவின கணக்கில் இரண்டு முறை பற்று வைத்து மேற்கொள்கின்ற வேலை கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்விற்கான ஆண்-டில் மிகை மற்றும் மேற்கொள்கின்ற வேலை கணக்கில் ரூபா.4,959,494 ஆல் குறைவாக காண்பிக்கப்பட்டு-ள்ளது. | நாட்குறிப்பேடுகளை தவறாக குறிப்பு வைக்கப்பட்டிருந்ததுடன், அதனை செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | செலவினம் செவ்-வையாக கணக்கு வைப்பதற்கு நடவ-டிக்கை மேற்கொ-ள்ளுதல் வேண்-டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) மீளாய்விற்கான ஆண்டில் பல்கலைக்கழகத்திடம் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா.2,000,800 ஆன வருமானம், ஆண்டின் வருமானமாக கருதி கணக்கு வைக்கப்படாது அடையாளம் காணப்படாத வருமானமாக நடைமுறை பொறுப்புகளின்கீழ் காண்பிக்கப்பட்டுள்ளதால், அதற்கு சமமான பெறுமதியில் மீளாய்விற்கான ஆண்டில் மிகை மற்றும் நடைமுறை பொறுப்புகளை ஒழுங்குமுறையில் குறைவாகவும் அதிகமாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | உரிய வருமானம் சரியாக அடையாளம் காணப்படும் வரை பொறுப்புகளாக காண்பிக்கப்பட்டுள்ளதுடன், சரியாக உறுதிப்படுத்திக்கொண்டதன் பின்னர் வருமானமாக அல்லது பிற்போடப்பட்ட வருமானமாக கணக்கு வைக்கப்படும். | ஆண்டுக்கு ஏற்புடையதாக வருமானம் செவ்வையாக அடையாளம் காணப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (உ) 2020 ஆண்டில் பல்கலைக்கழகத்திடம் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா.1,867,110 ஆன கிடைக்கப்பெறுவனவைகள் வருமானத்தில் அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாது, நடைமுறை பொறுப்புகளின்கீழ் அட்டுறு செலவினமாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டுள்ளதால் பிடிபண உழைப்புகள் மற்றும் நடைமுறை பொறுப்புகள் அதற்கு சமமான பெறுமதிகளில் ஒழுங்குமுறையில் குறைவாகவும் அதிகமாகவும் காண்பிக்கப்பட்டுள்ளது. | வருமானம் அடையாளம் காணுவதற்கு போதியளவு தகவல் இல்லாத பணம் கிடைக்கப்பெறுதலாகும். உரிய சாட்சி ஆவணங்கள் கிடைக்கப்பெற்றவுடன், வருமானமாகவோ பிற்போடப்பட்ட வருமானமாகவோ அடையாளம் காணப்படும். | ஆண்டுக்கு ஏற்புடையதாக வருமானம் செவ்வையாக அடையாளம் காணப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஊ) அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடியான காலம் 03 ஆண்டுகள் விஞ்சியிருந்த மற்றும் மீளாய்விற்கான ஆண்டில் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த செலவினம் ரூபா.7,627,908 ஆன 02 கணினி மென்பொருள்கள் 03 ஆண்டுக்குள் தேய்மானம் செய்து முடிவுறுத்தப்படுதல் வேண்டும் ஆயினும், பல்கலைக்கழகம் பின்பற்றுகின்ற தேய்மான கொள்கைபடி பயனுள்ள ஆயுட்காலம் 05 ஆண்டுகளாக கவனத்தில் கொண்டு தேய்மானம் செய்துள்ளதால் ரூபா.2,539,086 ஆன இழப்பீடு நட்டம் காரணமாக, ஆண்டின் மிகை அதற்கு சமமான பெறுமதியில் குறைவாக காண்பிக்கப்பட்டுள்ளது. | அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடியான காலம் 03 ஆண்டுகள் ஆயினும், பல்கலைக்கழக தேய்மான கொள்கைபடி 05 ஆண்டுகளுக்கு, ஏற்புடைய தேவை மீது இற்றைப்படுத்தலின் எதிர்பார்ப்புடன் தேய்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | மென்பொருட்களின் பயனுள்ள ஆயுட்காலம் கவனத்தில் கொண்டு தேய்மானம் மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (எ) புதிய கட்டிடம் நிருமாணிப்பதற்காக பழைய கட்டிடமென்றின் பகுதி 2018 ஆம் ஆண்டில் அகற்றப்பட்டிருந்த போதும், அகற்றப்பட்டிருந்த கட்டிடங்களின் பகுதியில் கொள்ளளவு பெறுமதி புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | இந்தக் கட்டிடத்தின் தேறிய பெறுமதி 2018 ஆம் ஆண்டில் அகற்றப்படாவிடினும், 2021 ஆம் ஆண்டில் கட்டிடங்களை மீள்கணிப்பீடு செய்து, தற்போதுள்ள கட்டிடங்களின் மீள்கணிப்பீடு மீது காண்பிக்கப்பட்டுள்ளது. | உடைத்து அகற்றப்பட்ட கட்டிடப் பகுதிகளின் கொள்ளளவு பெறுமதி புத்தகங்களில் அகற்றப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் |

| | | |
|---|---|---|
| | | வேண்டும். |
| (ஏ) 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் பணம் செலுத்தப்பட்ட போதிலும், அன்றைய திகதியில் ஆய்வுகூடத்திடம் கிடைக்கப்பெற்றிருந்த செலவினம் ரூபா.5,180,521 ஆன இரசாயனப் பொருட்களை கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த இரசாயனப் பொருட்களின் கொள்வனவு கட்டளைகளை பூர்த்தி செய்யாதபடியால் அட்டுறாக காண்பிக்கப்படவில்லை. | பல்கலைக்கழகத்திடம் கிடைக்கப்பெற்றிருந்த இரசாயனப் பொருட்களின் இருப்புகளை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 1.6 கிடைக்கப்பெறுவனவைகளும் செலுத்தப்பட வேண்டியவைகளும்

### 1.6.1 கிடைக்கப்பெறுவனவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தின் கற்கை நடவடிக்கைகளின் பொருட்டு வெளிநாடு சென்றிருந்த கற்கை பணியாற்றொகுதியின் 35 பேர் மற்றும் கல்விசாரா பணியாற்றொகுதியின் 06 பேர் மீண்டும் சேவைக்கு சமூகமளிக்காமை காரணமாக, உடன்படிக்கை மீறியதால் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா.117,355,212 தொகை அறவிடுவதற்கு போதியளவு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | 2021.12.31 ஆம் திகதியில் உடன்படிக்கைகளின் மொத்தம் ரூபா.117,355,212 தொகை பல்கலைக்கழகத்திடம் அறவிட வேண்டியிருந்தது. | பல்கலைக்கழகத்திடம் அறவிட வேண்டிய பணத்தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும் |

### 1.6.2 முற்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| பணி தடை செய்தல், சேவையிலிருந்து அகற்றுதல் மற்றும் ஏனைய காரணங்களால் சேவை முடிவுறுத்திய 16 அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய மொத்தம் ரூபா. 1,132,167 ஐ அறவிடுவதற்கு அல்லது புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | 2021 ஆண்டில் இரண்டு அலுவலர்களின் ஊழியர் சேமலாப நிதியம் விடுவிக்கையில ரூபா. 196,925 தொகை அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய அலுவலர்களின் ஊழியர் சேமலாப நிதியம் விடுவிக்கையில் இந்த கடன் தொகை சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கடன் மீதி அறவிடுவதற்கு அல்லது புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்கியொழுகாமை**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவை | | | |
| (i) நிதி ஒழுங்குவிதிகள் 394(இ) | மொத்தப் பெறுமதி ரூபா.1,226,544 ஆன இரத்துச் செய்யப்பட்ட 19 காசோலைகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | காசோலைகள் இரத்துச் செய்யும் பேரேடுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 03 ஆண்டுகள் விஞ்சிய பின்னர் இந்த இரத்துச் செய்யப்பட்ட காசோலைகளின் பெறுமதிகளை வருமானத்தில் சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதி ஒழுங்குவிதிக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ii) நிதி ஒழுங்குவிதிகள் 571 (2) | 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆண்டு வரையிலான காலப் பகுதிக்கு ஏற்புடையதாக 81 ஒப்பந்த வேலைகளில் மொத்தம்-ரூபா.66,552,132 ஆன பிடிபணம் மற்றும் 02 ஆண்டுகள் விஞ்சிய மொத்தம் ரூபா.1,275,175 ஆன மீளசெலுத்தப்பட வேண்டிய 88 கேள்வி வைப்புகள் தொடர்பில் நிதி ஒழங்குவிதிகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | 2021/10/04 ஆம் திகதி நிதிப் பிரிவால் ஏற்புடைய பிரிவுகளிடம் கடிதம் மூலம் இது தொடர்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், 2021/11/30 ஆம் திகதிக்கு முன்னர் உரிய பிடிபணம் தொகை விடுவிக்கும்படி அந்த பிரிவுகளை அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நிதி ஒழுங்குவிதிக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (iii) நிதி ஒழுங்குவிதிகள் 762 | மீண்டும் இருப்புக் கட்டளை மட்டம் பராமரிக்கப்படாமை மற்றும் தேவையற்ற வகையில் பொருட்களின் கொள்வனவு கட்டளைகளால் 30 ஆண்டுகளுக்கு மேலதிகமான காலம் தொடக்கம் காணப்படும் | தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரைகள் மீது காலவதியாகியுள்ள இரசாயனப் பொருட்களை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தேவையான அளவினை பார்க்க அதிக இருப்புகளை வைத்துக்கொள்- | நிதி ஒழுங்குவிதிக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இரசாயனப் பொருட்களின் மிகை இருப்புக் களஞ்சியத்தில் காணப்பட்டது. | ளாதிருப்பதற்கும், மீள கொள்வனவுகளின் கட்டளை மட்டத்தினை பராமரிப்பதற்கும் கற்கை பிரிவுகளிடம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவை 111 அத்தியாயத்தில் 9 ஆவது பிரிவு மற்றும் 10.3 பிரிவு | ஒப்பந்த அடிப்படையின் மீது நியமனம் பெற்றுக்கொண்டிருந்த கல்விசாரா பதவியணியில் 05 பேர்களின் ஒப்பந்தக் காலம் தாபனவிதிக் கோவையில் ஏற்பாடுகளுக்கு முரணாக 01 ஆண்டுகள் தொடககம் 05 ஆண்டுகள் வரையிலான காலப் பகுதிக்கு ஏற்புடையதாகும் வகையில் முற்தேதியிடப்பட்டிருந்தது. | அடிப்படை கல்வி தகைமைகளை பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தாரிகளை, ஆரம்பத்தில் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டு பின்னர் செயலாற்றுகை திருப்திகரமானதெனில் முற்தேதியிடப்பட்டு நியமனம் வழங்குதல் மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் இருந்தபோதிலும், இந்த செயற்பாடு தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது. | சுற்றுநிருபங்களின் ஏற்பாடுகளுக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா. 234,117,456 ஆன மிகை காணப்பட்டதுடன், அதற்கு எதிராக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா. 146,550,951 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயன் ரூபா. 380,668,407 ஆன வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு அரசாங்க அளிப்புகளின் அதிகரிப்பு பிரதான காரணமாகியது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 பொருளாதாரமற்ற கொடுக்கல்வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| உரிய சாத்தியவள கற்கை மேற்கொண்டு கருத்திட்டம் மேற்கொள்கின்ற ஆற்றலை உறுதிப்படுத்திக்கொள்ளாது, கேட்போர்கூடம் நிருமாணிப்பதற்கு ஏற்புடையதான பணியின் பொருட்டு ஆலோசனை கட்டணங்கள் மற்றும் திட்டங்களை தயாரிப்பதற்காக 2016 யூன் 22 ஆம் திகதி ரூபா. 5,794,676 ஆன தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், மீளாய்விற்கான ஆண்டு வரை அந்தப் பணி நிறைவேற்றாமை காரணமாக அதற்கு மேற்கொண்ட செலவினம் பொருளாதாரமற்ற கொடுக்கல்வாங்கலாகும். | அமைச்சரவை தீர்மானம் பிரகாரம், திட்டங்களை தயாரித்தல், இதன் முதலாவது கட்டமாவதுடன், திட்டங்களை தயாரிக்கப்படவில்லையெனில், அமைச்சரவை தீர்மானம் மீறுதலாகும் என்பதுடன், திட்டங்களை தயாரித்து ஆலோசனை சேவை நிறுவனத்திடம் கொடுப்பனவுகளை மேற்கொள்வதால் இது பொருளாதாரமற்ற செலவினம் அல்ல எனவும், பொருளாதார செலவினமாகவும் காண்பிக்கலாம். | உரிய சாத்தியவள கற்கைகளை மேற்கொண்டு கருத்திட்டங்களை ஆரம்பிக்க வேண்டுமென்பதுடன், ஆகக்குறைந்த செலவினத்தின்கீழ் கருத்திட்டம் முடிவுறுத்துவதன்மீது முகாமைத்துவம் கவனம் செலுத்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மருத்துவ பீடத்தின் பொருட்டு மெத்செவன காணியில் 6.5 ஏக்கர் கொண்ட நில அளவினை 03 கட்டங்களின் கீழ் சுவீகரித்துக்கொள்வதற்காக 1994 ஆம் ஆண்டு யூன் 29 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானம் படி, 1998 ஆண்டு தொடக்கம் 2019 ஆண்டு வரை மொத்தம் ரூபா.மில்லியன் 74 ஐ மேல் மாகாண சபையிடம் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 03 காணித் துண்டுகளை சுவீகரித்துக்கொள்வதற்காக 2013 ஆம் ஆண்டு தொடக்கம் ஒக்டோபர் 09 ஆம் திகதி வரை அந்தக் காணிகளின் பெறுமதியில் 25% ஆன ரூபா. மில்லியன் 2.5 ஐ மஹரகம பிரதேச செயலகத்திடம் செலுத்தப்பட்டிருந்தது. ஆயினும் அந்தக் காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகள் | 2022.04.07 ஆம் திகதி மாகாண பிரதான செயலாளருடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் பின்னர் "மெத்செவன நிலப் பகுதி" சமூக சேவைகள் திணைக்களத்தால் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. காணியின் உரிமையாளர் இந்தக் காணியின் மதிப்பீடு தொடர்பாக திருப்தியடயாமை காரணமாக 2016 ஆம் ஆண்டில் காணிகளின் நட்டம் தொடர்பாக மேன்முறையீட்டு சபையிடம் விண்ணப்பம் முன்வைக்கப்பட்டுள்ளது. குறித்த விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், குறித்த பணிகள் முடிவடையும் வரை காணி பயன்கொள்வதனை தவிர்ந்த, பிரதேச செயலாளரிடம் உரிமை கையளிப்பதற்கு இயலாது. 2022 சனவரி மாதம் தொடக்கம் இந்த மேன்முறையீடு தற்போது 04 | காணி கையகப்படுத்தும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியிலும் முடிவுறுத்தப்படவில்லை. | நாட்கள் அழைக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை அதன் விசாரணை முடிவுறுத்தப்பட்டு தீர்மானம் கிடைக்கப்பெறவில்லை. | |
| (ஆ) 2013 ஆம் ஆண்டு தொடக்கம் சுவீகரித்துக்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட மதிப்பீட்டு பெறுமதி ரூபா.மில்லியன் 52 ஆன பொரலஸ்கமுவ காணி பொருட்டு ரூபா.மில்லியன் 13 ஐ 2018 ஆம் ஆண்டில் கெஸ்பாவ பிரதேச செயலகத்திடம் செலுத்தப்பட்டிருப்பினும், அந்த நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டு சனவரி 31 ஆம் திகதியிலும் முடிவுறுத்தியிருக்கவில்லை. | 2017.08.08 ஆம் திகதி நிதிக் குழுவின் தீர்மானம் பிரகாரம் 52 மில்லியன் தொகை மதிப்பீட்டு பெறுமதியில் 25% ஐ கெஸ்பாவ பிரதேச செயலகத்தில் 2020.08.20 ஆம் திகதி வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், உரிய இரசீதுடன் ஆவணங்களை 2020.08.21 ஆம் திகதியில் உயர் கல்வி அமைச்சிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகம் பொருட்டு மூலதன ஒதுக்கீடுகள் கிடைக்காமை காரணமாக கொடுப்பனவு தாமதமாகியுள்ளது. | காணிகளை சுவீகரித்துக் கொள்ளும் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) 2019 வரவு செலவு திட்டத்தில் உள்ளடக்கியிருந்த மற்றும் 2021 ஆம் ஆண்டில் முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த ஒவ்வாமை நோயெதிர்ப்பு மற்றும் உயிரணு உயிரியல் பிரிவு தாபிக்கப்படாதிருக்கையில், அதற்கு தேவையான செலவினம் ரூபா.376,244,974 ஆன மருத்துவ உபகரணங்கள் 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அந்த உபகரணங்கள் மருத்துவ பீடத்தின் ஒவ்வொரு இடங்களில் நிலைப்படுத்தியிருந்ததுடன், ஒவ்வாமை நோயெதிர்ப்பு மற்றும் உயிரணு உயிரியல் பிரிவு தாபிக்கும் பணிகள் தாமதமடைந்திருந்தன. | வரவு செலவு திட்டம் படி 2021 ஆம் ஆண்டில் உபகரணங்கள் வழங்கப்பட்டிருப்பினும், நிலைப்படுத்துவதற்கு தேவையான இடவசதி இல்லாமையால் பல மாடிகளில் நிலைப்படுத்தப்பட்டிருந்தன. ஆயினும், அந்த உபகரணங்கள் தேவையான ஆராய்ச்சி நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தப்படுகின்றன. | கொள்வனவு செய்து-ள்ள உபகரணங்களை பாதுகாப்பான முறை-யுடன் பயன்படுத்து-வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஈ) 2018 ஆண்டு தொடக்கம் 2020 ஆண்டு வரையிலான காலப் பகுதிக்கு ஏற்புடையதாக மகாபொல புலமைப்பிரிசில் மற்றும் மாணவர் உதவுதொகை பொருட்டு கிடைக்கப்பெற்றிருந்த ரூபா. 1,608,200 ஐ சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. | 2018, 2019, 2020 ஆண்டுகளுக்காக மகாபொல புலமைப்பரிசில் பணத்தொகை செலுத்தப்பட்ட போதிலும், மாணவரகளின் வங்கி கணக்கு இலக்கங்களில் காணப்பட்ட பிரச்சினைகள் காரணமாக வங்கியிடம் மீள வரவு வைக்கப்பட்டுள்ளது. | மகாபொல புலமைப் பரிசில் மற்றும் மாணவர் நன்கொடை தொகை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) பல்கலைக்கழகத்தால் கொம்போஸ்ட் உரம் தயாரிக்கும் செயற்பாடு ஆரம்பிப்பதற்கு பல ஆண்டுகள் தொடக்கம் | கொம்போஸ்ட் தயாரிப்பதற்கு பொருத்தமான இடம் ஒதுக்கீடு செய்யும் பிரச்சினைகள் உள்ளன. விஞ்ஞான பீடத்தில் | கழிவுபொருள் முகாமைத்துவத்தின் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தி செலவினம் |

| | | | |
|---|---|---|---|
| | திட்டமிடப்பட்டிருப்பினும், மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை தொடங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமை காரணமாக பல்கலைக்கழகத்தின் திண்ம மற்றும் திரவ கழிவு பொருட்களை அகற்றல் பொருட்டு கடந்த ஆண்டில் அண்ணளவாக 25 இலட்சம் ரூபாவும், பூங்கா பராமரித்தல் நடவடிக்கைகளின் பொருட்டு ஓராண்டுக்கு ரூபா. 4,044,000 தொகையும் கழித்து கொள்வதற்கு முடியாதிருந்தது. | Center for sustainability நிலையத்துடன், தொடர்பு கொண்டு கழிவுபொருட் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் எதிர்வரும் ஆண்டுகளில் செயற்படுத்தப்படவுள்ளது. | குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | மூன்று கற்கை பிரிவுகளில் இரசாயனப் பொருட்களுக்கான கொள்வனவு கட்டளை மேற்கொள்கையில், அவை கிடைக்கப்பெறுவதில் தாமதங்கள் 03 மாதங்கள் தொடக்கம் 01 ஆண்டு காலம் வரை காணப்பட்டது. மேற்படி கற்கை பிரிவால் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை கொள்வனவு கட்டளைகள் மேற்கொண்ட போதும், 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா.2,019,641 பெறுமதியிலான இரசாயனப் பொருட்கள் உரிய பிரிவுகளிடம் கிடைக்கப்பெறவில்லை. | இரசாயனப் பொருட்களை கொள்வனவு செய்யும் கட்டளைகள் வழங்கியிருப்பினும், உரிய கட்டளைகளை பூர்த்தி செய்வதற்கு அதிகமான காலம் எடுப்பதுடன், கொரோனா தொற்று நோய் காரணமாக இந்த இரசாயனப் பொருட்கள் கிடைக்கப்றெுதல் மேலும் தாமதமடைந்தது. | கொள்வனவு கட்டளை வழங்கிய பொருட்களை உரிய திகதியில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்-ளுதல் வேண்டும். |
| (எ) | தேவைகளை உரியவாறு அடையாளம் காணப்படாது கொள்வனவுகள் செய்வதன் காரணமாக, அசையாத 456 உருப்படிகளின் இருப்பு பெறுமதி ரூபா. 9,478,874 ஆனதுடன், மெதுவாக அசைகின்ற 171 உருப்படிகளின் இருப்பு பெறுமதி ரூபா 5,467,114 ஆகும். | பல்கலைக்கழக கற்கை நடவடிக்கைகளின் பொருட்டு வசதிகளை வழங்குகைபயில் மிக விரைவில் பழுதுபார்த்தல் அத்தியாவசியமாவதால், பராமரிப்பு உருப்படிகள் பேணப்படுகின்றன. இந்த இருப்புகளை பரிசோதனை செய்வதற்கு தொழில்நுட்ப குழு நியமனம் செய்துள்ளதுடன், பரிந்துரைகளுக்கமைவாக இருப்புகளை சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | தேவைகளை உரிய-வாறு அடையாளம் காணப்பட்டு கொள்வன-வுகளை மேற்கொள்-ளுதல் வேண்டும். |
| (ஏ) | மீளாய்விற்கான ஆண்டின் இறுதியில் 06 ஆண்டு காலப்பகுதியில் பல்கலைக்கழகத்தின் 453 விரிவுரையாளர்களின் பொருட்டு மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா.மில்லியன் 868 தொகையில், பல்வேறு ஆராய்ச்சிகள் 459 பொருட்டு ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டு குழுவின் அனுமதி | கொரோனா தொற்று நோய் நிலைமை காரணமாக ஆராய்ச்சி நிலைமைகளை பராமரிப்பதற்கு தடைகள் காணப்பட்டதுடன், ஆராய்ச்சிகளின் முன்னேற்றம் தொடர்பாக பல்கலைக்கழக ஆராய்ச்சிக் குழுவால் மேற்பார்வை செய்வதுடன், அதன்படி பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. இவ்வாறு முன்னேற்றம் | உரிய காலப்பகுதிக்குள் ஆராய்ச்சிகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்-கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்டிருந்தது. அதில் நீங்கல் மற்றும் பணம் பெற்றுக்கொள்ளாமை காரண-மாக 34 ஆராய்ச்சிகள் நிறுத்-தப்பட்டிருந்ததுடன், மொத்தம் ரூபா.மில்லியன் 454.3 ஆன 193 ஆராய்ச்சிகள் மீளாய்விற்-கான ஆண்டு இறுதி வரை பூர்த்தி செய்யப்படவில்லை. | இல்லாத மற்றும் முழுமையா-க்காத ஆராய்ச்சிகளின் பொரு-ட்டு நினைவூட்டல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், புதிய ஆராய்ச்சிகளுக்காக அவர்க-ளிடம் நன்கொடை வழங்குதல் நிறுத்தப்பட்டுள்ளது. | |

### 3.3 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆண்டில் வெளியக பட்டம் மற்றும் விரிவான கற்கைநெறி அலகின் கற்கை-நெறிகள், கருத்தரங்குகள் மற்றும் பரீட்சை நடாத்துவத-ற்காக ரூபா.115,225,177 ஐ மாணவர்களிடம் அறவிடப்பட்ட போதும், அந்தப் பணிகளை முடிவுறுத்தப்படவில்லை. | கற்கைநெறி கட்டணங்களை பெற்றுக்-கொள்ளும் போது எதிர்வரும் ஆண்டுகளுக்கும் பணம் பெற்றுக்-கொள்ளப்படுவதுடன், அந்த தொகை தேவையான விரிவுரைகளை நடாத்து-கின்ற வரை பிற்போடப்பட்ட வருமா-னமாக அடையாளம் காணப்படும். | கருத்தரங்குகள் மற்றும் பரீட்சைகள் நடாத்துவதை உரிய காலப்-குதிக்குள் நடாத்-தல் வேண்டும். |

### 3.4 நிதியத்தின் குறை பயன்பாடு

--------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உலக சுகாதார அமைப்பினால் கோவிட் தொடர்பான ஆராய்ச்சி பொருட்டு 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் பல்கலைக்கழகத்திடம் வழங்கியிருந்த ஒழுங்குமுறையில் ரூபா.6,174,500 மற்றும் ரூபா.29,368,398 ஆன தொகையில், மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆம் திக-தியில் எஞ்சியிருந்த ரூபா.27,855,947 ஐ உபயோகப்படுத்துவதற்கு நடவடி-க்கை மேற்கொள்ளப்படவில்லை. | உடன்படிக்கை படி 2021.11.30 ஆம் திகதி முடிவுறுத்துவதற்கு குறிப்பு வைக்கப்பட்டிரு-ப்பினும், நாட்டில் காணப்பட்ட நிலைமையின் காரணமாக ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்-கப்பட்டது. அந்தக் கருத்தி-ட்டம் 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் வரை நீட்டிக்கப்பட்-டுள்ளது. | பணம் ஏற்புடைய பணிக்காக உபயோகப்படுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் அன்பளிப்பு மற்றும் புலமை நிதிகள் 82 இன் கீழ் நிலவிய ரூபா.31,609,427 ஐ ஏற்புடைய நோக்கங்களின் பொருட்டு உபயோகப்படுத்த-வில்லை. | இந்த புலமை நிதியத்தில் காணப்படும் திரட்டிய மீதிகள் தொடர்பாக வருடாந்த பட்டப்-படிப்பு வைபவத்திற்கு, சம்பந்-தப்பட்ட பீடங்களின் பதிவாள-ர்கள் மற்றும் பல்கலைக்கழ-கத்தின் பரீட்சை பிரிவிடம் எழுத்தில் அறிவிக்கப்படுகிறது. அதன்படி நிதியத்தில் எந்த | நிதியம் தாபிக்கும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிதி உபயோகப்ப-டுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அளவு தொகை ஆண்டில் உபயோகப்படுத்துவது என்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட பீடங்களுக்கு தீர்மானிக்கும் அதிகாரம் உள்ளபடியால் அவர்களால் உறுதிப்படுத்தப்படுகின்ற பணத்தொகை மட்டும் அந்தந்த நிதியத்திலிருந்து உபயோகப்படுத்தப்படும். | |
| (இ) 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்தம் ரூபா.34,368,284 ஆன ஆராய்ச்சி நிதியத்தின் 21 கணக்குகள் 06 ஆண்டுக்கு அதிகமான காலமும், மொத்தம் ரூபா.36,622,659 ஆன வெளியக ஆராய்ச்சி நிதியத்தின் 54 ம், மொத்தம் ரூபா.562,099,625 ஆன 37 விசேட நிதியங்கள் மீளாய்விற்கான ஆண்டில் ஏற்புடைய நோக்கங்கள் பொருட்டு உபயோகப்படுத்த-வில்லை. | ஏற்புடைய ஆராய்ச்சி நிதியம் உறுதியான நோக்கத்தின் பொருட்டு கிடைக்கப்பெற்றிருந்ததுடன், அதற்காக உபயோகப்படுத்தப்படுகிறது. ஆயினும், செயலற்ற மீதிகள் காணப்படுகின்ற மீதிகளில் அளிப்பு பெறுநர்களிடம் கடிதங்கள் மூலம் அறிவுறுத்தப்பட்டு பொது ஆராய்ச்சி நிதியத்திடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், இந்தச் செயற்பாடு 2022 ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுவதுடன், செயலற்ற நிதியை உபயோகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். விசேட நிதியத்தின் கீழ் உள்ள தொகையும் சம்பந்தப்பட்ட பணிக்காக மட்டும் பயன்படுத்த முடியுமென்பதுடன், இந்த தொகை 2022 ஆம் ஆண்டில் உபயோகப்படுத்தப்படுகிறது. | நிதியம் தாபிக்கும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிதி உபயோகப்படுத்தல் வேண்டும். |

## 3.5 ஒப்பந்த நிருவாகத்தின் குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தொழில்நுட்ப புத்தாக்கம் மற்றும் தொழில்முயற்சி உதவி நிலையம், பிரயோக விஞ்ஞான பீடத்தின் தாவரவியல் கற்கைப் பிரிவில் 3 மாடிகளைக் கொண்ட கட்டிடம் மற்றும் பிரயோக கல்வி பீடத்தின் 8 மாடிகளைக் கொண்ட கட்டிடத்தின் 5 ஆம் மாடி என்ற வகையில் நிருமாணிப்பு ஒப்பந்தங்கள் 3 இற்கு ஏற்புடையதாக 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் ஒப்பந்தக்காலம் ஒழுங்குமுறையில் 344 நாட்கள், 659 நாட்கள், 214 நாட்கள் என்ற வகையில் தாமதமடைந்திருப்பினும், | நாட்டில் நிலவிய கொரோனா தொற்றுநோய் மத்தியில் அவ்வப்போது நாளாந்த கடமை அலுவல்கள் செயலற்று போதல், கட்டிடப் பொருட்களின் பற்றாக்குறை, தொழில் பெற்றுக்கொள்வதற்கு முடியாமை போன்ற விடயங்களை கவனத்தில் கொண்டு கட்டுப்பாட்டுச் சபையால் பல சந்தர்ப்பங்களில் காலப்பகுதி நீட்டிப்பு செய்யப்பட்டிருந்தது<br><br>இந்தக் கருத்திட்டம் தற்போது நடைமுறைப்படுவதுடன், குறித்த ஒப்பந்தக்காரர்களைக் கொண்டு | கட்டிடங்களின் திட்டங்களை அங்கீகரித்துக்கொள்வதற்கும் ஒப்பந்தம் உரிய திகதியில் முடிவுறுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நீட்டிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. 3 ஒப்பந்தங்களில் இறுதி இரசீதுகளை சமர்ப்பித்த திகதியில் வேலை முடிவுறுத்திய சதவீதம் ஒழுங்குமுறையில் 65மூஇ 66மூ மற்றும் 53மூ ஆகும். இந்த ஒப்பந்தங்கள் 3 இற்கான கட்டிடங்களின் திட்டங்கள் மாநகர சபையில் அங்கீகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதுடன், நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிருணய சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த பணிகளை முடிவுறுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | |
| (ஆ) | மொத்த செலவினம் ரூபா.மில்லியன் 363.5 ஆன பிரயோக விஞ்ஞான பீடத்தின் 08 மாடிகளைக் கொண்ட கட்டிடம் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 03 கட்டங்களில் நிருமாணிப்பதற்கு அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றிருப்பினும், ஐந்தாம் மாடியாகும்போது 04 ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. | அனுமதி கிடைக்கப்பெற்றிருப்பினும், பண ஒதுக்கீடு இல்லாமை காரணமாக நிதி கிடைக்கப்பெறுவதை அடிப்படையாக கொண்டு, கட்டம் கட்டமாக ஒப்பந்தங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் ஒதுக்கீடுகளை கொண்டு நிருமாணிப்பதற்கு முடியுமான பகுதியை நிருமாணித்து மாணவர்களின் பயன்பாட்டுக்கு வழங்குதல் இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. | அமைச்சரவை அனுமதிக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |